[1994 ஏப்ரல் 20

318—

சீர்காழித் தொகுதியில் சில கோவில்களில் பராமரிப்பை அறநிலையத் துறையின்கீழ் கொண்டு வருதல்.

*12507—திரு. து. மூர்த்தி :

மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதியில் உள்ள கற்கோவில் கிராமம் கண்ணன் கோவில் மற்றும் விநாயகர் கோவில் பராமரிப்பை இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து–சமய அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சீர்காழி வட்டம் கற்கோயில் கிராமம் அருள்மிகு கண்ணன் கோயில் என்கிற பாண்டுரங்க பஜனை மடமானது இந்து சமய அறநிலையத் துறையின் ஆளுகைக்குக் கொண்டுவரப்பட்டு, 14-9-1993 அன்று சிறு ஆலயங்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. அருள்மிகு விநாயகர் என்கிற வெள்ளந்தாங்கி விநாயகர் திருக்கோயிலானது, தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) அமலுக்கு வந்த நாளான 1-1-1960-க்கு முன்பிருந்தே அருள்மிகு வைத்தியநாதசுவாமி திருக்கோயிலின் உபகோயிலாக இருந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சீர்காழித் தொகுதியில் உள்ள கற்கோயில் என்ற கிராமத்திலுள்ள கண்ணன் கோவில் மற்றும் விநாயகர் கோவில் ஆகியவை பழம்பெறும் பெறுமை பெற்றவை. இவை பராமரிப்புச் செய்யப்படாமல், இடிந்து பாழடைந்த நிலையில் உள்ளன. இதனால், அந்தப் பகுதியிலுள்ள பெருமக்கள், பக்தர்கள் வழிபட முடியாத நிலை இருக்கிறது. என்னிடம் நேரில் வந்து, அந்தக் கோவில்களை அரசின் மூலம் புதுப்பித்துத் தந்தால், அந்தப் பகுதியிலுள்ள பெருமக்கள், பக்தர்கள் வழிபடுவதற்கு வசதியாக இருக்குமென்று தொகுதி மக்கள் கூறினார்கள். மேலும், அந்தப் பகுதி, மிகவும் பின்தங்கிய பகுதி. எல்லோரும் கிராமத்து மக்கள். எனவே, தென்னகத்தின் காவல் தெய்வம், எங்களுடைய இதயதெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நிதியாண்டிலேயே இந்து–சமய அறநிலையத் துறையின்கீழ், அந்த

1994 ஏப்ரல் 20]

இரண்டு கோவில்களையும் கொண்டுவந்து, பராமரிப்பு செய்ய ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தெய்வீகத்தைக் காக்க வேண்டும், தெய்வீகத்தைப் பேண வேண்டும் என்பதிலே, இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் மிக உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கோரிக்கையை, இந்த அரசு கனிவோடு ஏற்று, அதைச் செய்யும் என்பதை உங்கள் மூலமாகச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் *319*, திருமதி ப. சரஸ்வதி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

319—

பரமத்தி வேலூர் தாலுக்காவில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வீட்டு மனைப்பட்டா வழங்குதல்.

***10099*—திருமதி ப. சரஸ்வதி:**

மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமத்தி வேலூர் தாலுக்கா, வேலூரில் உள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வீட்டு மனைப்பட்டா வழங்க நிலம் கையகப்படுத்தியும் இன்னும் அவர்களுக்கு வழங்கப்படாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிலம் வழங்கப்படும் ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் மற்றும் மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பரமத்தி வேலூர் வட்டம், வேலூரில் உள்ள மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க நிலம் கையகப்படுத்தும் முயற்சி நிலம் கையகப்படுத்தும் சட்டத்தின் கீழ் இறுதிக் கட்டத்தில் உள்ளது. நிலம் கையகப்படுத்தியதும் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும்.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

முற்பகல் *11-05*

திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,